Judicial Form No. 53
[See Rule 42]
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,PAPPIREDDIPATTI**

| | |
|---|---|
| Calendar | **CC. No.10/2019** |
| Deposition of Sworn Statement | **DW1** |
| Name | : அருண்பிரசாத் |
| Father's Name/Husband Name | : அன்பழகன் |
| Village | : பாப்பிரெட்டிபட்டி |
| Taluk | : பாப்பிரெட்டிபட்டி |
| District | : தருமபுரி |
| Religion | : Hindu |
| Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **23.07.2026**

**எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்**

**புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

வழக்கின் புகார்தாரரை எனக்கு தெரியும்.

2017 ம் ஆண்டு முதல் எனக்கு தெரியும்.

எலந்தக்கோட்டப்பட்டியை சேர்ந்த கார்த்திகேயன் என்பவர் மூலமாக எனக்கு புகார்தாரரை தெரியும்.

கார்த்திகேயன் எனது நண்பர்.

கார்த்திகேயனும் 2017 ம் ஆண்டு முதல் தான் தெரியும்.

கார்த்திகேயன் 2017 ம் ஆண்டு முன்னிட்டு எனக்கு நண்பர் இல்லை.

புகார்தாருக்கு முன்னிட்டே எனக்கு கார்த்திகேயனை தெரியும்.

நான் புகார்தாரரை வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மூன்று முறை பார்த்துள்ளேன். அதற்குமேல் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

புகார்தாரர் எனக்கு எந்த தேதியில் ரூ.1,50,000/- பணம் கொடுத்தார் என்று எனக்கு தேதி ஞாபகமில்லை.

மேற்கண்ட ரூ.1,50,000/–த்தை எந்த தேதியில் புகார்தாரருக்கு திருப்பி கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. ஆனால் SBI Deposit Machine மூலமாக புகார்தாரருக்கு ரூ.1,50,000/– த்தை திருப்பி கொடுத்துவிட்டேன். மேற்கண்ட பணத்தை சுமார் 7 தவணைகளாக Deposit செய்தேன்.

நான் பணத்தை பெற்ற தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் திருப்பி கொடுத்துவிட்டேன்.

நான் பணம் பெற்றுக்கொண்டு வேலை வாங்கி தரும் வேலையும் செய்துவந்தேன். ஆனால் அது என்னுடைய தொழில் கிடையாது.

எனது பிரமாண வாக்குமூலத்தில் கார்த்திகேயன் மூலமாக புகார்தாரருக்கு வேலை வாங்கி தருவதாக ரூ.1,50,000/– த்தை பெற்றுக்கொண்டு ஜெயராமன் என்பவரிடம் கொடுத்தாக சொல்லியுள்ள சங்கதிகள் உண்மை ஆகும்.

நான் புகார்தாரரிடம் பெற்ற ரூ.1,50,000/– பணத்தை ஒரு வார காலத்திற்குள் ஜெயராமன் என்பவரிடம் கொடுத்துவிட்டேன்.

புகார்தாரர் வேலைக்கான முழு தொகையையும் கொடுக்காத காரணத்தினால் எங்களால் புகார்தாரருக்கு வேலை பெற்றுக்கொடுக்க முடியவில்லை.

மேற்கண்ட ரூ.1,50,000/– ஐ ஜெயராமன் என்னிடம் 3 மாதங்கள் கழித்து கொடுத்தார். நான் அதற்கு முன்னிட்டே புகார்தாரருக்கு பணத்தை சிறுகசிறுக கொடுக்க ஆரம்பித்தேன்.

ஜெயராமன் என்னிடம் எந்த தேதியில் பணத்தை கொடுத்தார் என்று எனக்கு ஞாபகமில்லை.

வழக்கு காசோலை என்னுடையதுதான்.

வழக்கு காசோலையில் 20.10.2018 ம் தேதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அந்த தேதியை நான் எழுதவில்லை.

என்னிடம் காட்டப்படும் வழக்கு காசோலையில் ரூ.2 லட்சம் ரூபாய் பணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதை நான் எழுதவில்லை.

வழக்கு காசோலை ரூ.1,50,000/– க்கான கேரண்டிக்காக கார்த்திகேயனிடம் கொடுத்தேன்.

பொதுவாக கேரண்டிக்காக ஒரு ஆவணத்தை மற்றொரு நபருக்கு கொடுக்கும்போது அதில் கையெழுத்து போட்டுதான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு ஆவணத்தில் கையெழுத்து போட்டுக்கொடுத்தால் தான் அது கேரண்டி ஆவணம் என்றால் சரிதாதன்.

வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதில்லை.

வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடைய கையொப்பம் இல்லை என்பதால் அது கேரண்டி ஆவணம் இல்லை என்றால் சரிதான்.

என்னிடம் வழக்கு காசோலையை தவிர வேறு எந்த கேரண்டி ஆவணமும் புகார்தாரார் பெறவில்லை.

புகார்தாரர் வழக்கு காசோலை சம்மந்தமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். அதை நான் பெற்றுக்கொண்டேன். அறிவிப்பை பெற்றுக்கொண்ட நான் புகார்தாரரிடம் சென்று ஏன் இவ்வாறு எனக்கு அறிவிப்பு அனுப்பினீர் என்று கேட்டேன் அதற்கு புகார்தாரர் நான் வழக்கு எதுவும் தாக்கல் செய்யமாட்டேன் என்று கூறினார்.

நான் அறிவிப்பை பெற்றுக்கொண்ட ஒரு வாரத்தில் சென்று புகார்தாரரை கேட்டேன்.

மேற்கண்ட அறிவிப்பை பொறுத்து ஒரு முறை மட்டுமே புகார்தாரரிடம் கேட்டேன். வேறு எப்போதும் கேட்கவில்லை.

அதன் பின்னிட்டு புகார்தாரர் வழக்கு தாக்கல் செய்த விவரத்தை நான் தெரிந்துக்கொண்டேன்.

வழக்கு தாக்கல் செய்ததன் பின்னிட்டு தான் வழக்கு காசோலையை பற்றி எனக்கு தெரியும்.

வழக்கு காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையதில்லை என்பதை பொறுத்து நான் காவல் நிலையத்தில் எந்த புகாரும் கொடுக்கவில்லை. காசோலை எண் எனக்கு ஞாபகமில்லை என்பதால் நான் புகார் கொடுக்கவில்லை.

நான் புகார்தாரரிடம் ஏன் என் கையெழுத்தை தவறுதலாக போட்டுள்ளீர் என்று கேட்கவில்லை.

வழக்கு தாக்கல் செய்ததின் பின்னிட்டு எனது காசோலையில் தவறாக கையொப்பம் செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியும்.

எனது கையொப்பத்தை ஒப்பீடு செய்வதற்காக ஆய்வுக்கு அனுப்ப எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

எனது கையொப்பம் போலியாக போடப்பட்டுள்ளது என்று நான் நீதிமன்றத்திற்கு ஏதாவது விண்ணப்பம் செய்தேனா என்றால் இல்லை.

நான் பணம் கொடுத்துவிட்டதால் விண்ணப்பம் ஏதுவும் கொடுக்கவில்லை.

நான் புகார்தாரருக்கு 10 ஆயிரம், 20 ஆயிரம் என தவணை முறையில் பணத்தை திருப்பிக்கொடுத்தேன்.

நான் கொடுத்த மேற்கண்ட பணம் வழக்கு காசோலை தேதிக்கு முன்னிட்டு கொடுத்தேன்.

நான் கொடுத்த பணம் ஏற்கனவே நான் புகார்தாரரிடம் கைமாத்தாக வாங்கிய சிறுசிறு கடனுக்கான தொகை என்றால் சரியல்ல.

எனக்கும் புகார்தாரருக்கும் இடையே கொடுக்கல்வாங்கல் சம்மந்தமாக பழக்கவழக்கம் உள்ளது என்றால் சரியல்ல.

எனக்கும் புகார்தாரருக்கும் இடையே கொடுக்கல்வாங்கல் இருப்பதால்தான் நான் 2 லட்சம் ரூபாயை புகார்தாரரிமிருந்து பெற்றேன் என்றால் சரியல்ல.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு என் முன்னர் கையொப்பம் செய்தார்.**

**நீதித்துறை நடுவர் பாப்பிரெட்டிபட்டி.**